# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக**

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

************

முறையீட்டு மனு எண்246/2015

ஆணை எண். 23/2015

நாள்: 31/12/2015

திரு.M. பரமசிவம்,
த/பெ. திரு. மாரிமுத்து,
சக்கம்பட்டி,
ஆண்டிபட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம். - முறையீட்டு மனுதாரர்

திரு.எம். கண்ணன்,
சக்கம்பட்டி,
ஆண்டிபட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம். - எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி, சக்கம்பட்டி பகுதியைச் சேர்ந்த திரு.எம்.பரமசிவம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.10.2015 அன்று பெறப்பட்டு 246/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆணை:**

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி, சக்கம்பட்டி பகுதியைச் சேர்ந்த திரு.எம்.பரமசிவம் மற்றும் சிலரும் கையொப்பமிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டுள்ளது. மேற்படி முறையீட்டு மனுவில், ஆண்டிபட்டி பேரூராட்சியில் துப்புரவு பணியாளராகப் பணியாற்றும் திரு.எம்.கண்ணன் என்பவர் துப்புரவுப் பணிக்கு முறையாக செல்லாமல் வட்டித் தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும், மேலும் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி தன்னுடைய வீட்டுக்கு 200 அடி நீளத்துக்கு பைப் லைன் அமைத்து குடிநீர் கொண்டு செல்ல முயற்சிக்கிறார் என்றும் முறையிடப்பட்டுள்ளது.

இதனால் 2வது வார்டு மற்றும் 17வது வார்டு பொதுமக்கள் குடியிருப்புகளுக்குச் செல்லும் குடிநீர் இணைப்பு தடைபடுவதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

2. மேற்படி முறையீடு சம்பந்தமாக ஆண்டிபட்டி பேரூராட்சியின் செயல் அலுவலரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. 21.11.2015 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின்பொழுது, குற்றம் சாட்டப்பட்ட பேரூராட்சி பணியாளர் திரு.எம்.கண்ணன் வார்டு எண்.2–ல் அவரது சொந்த வீட்டில் குடியிருந்து வருவதாகவும், அவர் வீட்டுக்குச் செல்லும் குடிநீர் இணைப்பு குழாயில் பழுது ஏற்பட்டதால் குடிநீர் தடைபட்டு உள்ளது என்று தல ஆய்வின்பொழுது கண்டறியப்பட்டது என தெரிவித்துள்ளார். மேலும் புகார் மனுவில் தெரிவித்தபடி பிரதான குழாய் எதுவும் போடப்படவில்லை என்றும், இப்பகுதியில் "அடிப்படை கட்டமைப்பு நிதிப் பற்றாக்குறை ஈடு செய்யும் திட்டத்தின் கீழ் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பகிர்மான குழாய் பதிப்பதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும் விசாரணையின்பொழுது பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்தார். மேற்படி பணி முழுமை அடையும் நிலையில் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வார்டு மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. முறையீட்டு மனு சம்பந்தமாக விசாரணைக்கு வருமாறு 26.11.2015 நாளிட்ட அழைப்பாணை (Summon) அனுப்பப்பட்டு, விளக்கம் அளிக்குமாறு மனுதாரர் கோரப்பட்டார். 07.12.2015 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு மனுதாரர் வரவில்லை. எனவே, மனுதாரரின் முறையீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மைத் தன்மை அற்றது என கண்டறியப்பட்டது. நேரடி விசாரணையின்பொழுது, ஆண்டிபட்டி பேரூராட்சியின் செயல் அலுவலர் அளித்த விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவம் ஏற்கிறது. பேரூராட்சியின் செயல் அலுவலர் குறிப்பிட்ட பணி நிறைவு பெற்றவுடன், முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்க உறுதி செய்யுமாறு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

ஒப்பம்/–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

31/12/15

கண்காணிப்பாளர்

பெறுநர்

பேரூராட்சி செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி பேரூராட்சி,
ஆண்டிபட்டி,
தேனி மாவட்டம்.